1970 ஏப்ரல் 3]

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் தொகுதியிலுள்ள கொப்பனுபட்டி முஸ்லீம்கள் வாழும் பகுதி. அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு இடம் கிடைக்கிறது. அங்கு முஸ்லீம்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக நிலத்தை அடமானம் செய்துதர வேண்டுமென்று கோரி வருகிறார்கள். இன்னும் அடமானம் செய்யாமல் இருப்பதால் அரசு விரைவில் அந்த இடத்தை அடமானம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கு இடமிருந்து கேட்கும்படியான நிலைமையுமிருந்தால், இந்த அரசாங்கத்தின் கொள்கை எவ்வளவு தூரத்திற்கு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கவும், வீட்டு மனையில்லாதவர்களுக்கு வீட்டு மனை கொடுக்கவும் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை ரொம்பத் தீவிரமாக அமல்படுத்துவதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். கொப்பனுபட்டியைப் பொறுத்த வரையிலும் முஸ்லீம்கள் சொல்லும் இடத்திலே இடம் இருந்தால் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதி மொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. மா. இராசாங்கம்
2. திரு. எஸ். முருகையன்
3. திரு. எம். மேத்தா
4. திரு. எ. கோ பாலகிருஷ்ணன்
5. திரு. வீ. மலைக்கண்ணன்
6. திரு. மு. மாரிமுத்து
7. திரு. கே. விநயகம்
8. திரு. கே. எஸ். கோதண்டராமைய்யா
9. திருமதி கே. பி. ஜானகியம்மாள்

1970 ஏப்ரல் 3]

10. திரு. பி. ஜெயராஜ்
11. திரு. எம். அப்துல் கபூர் சாகிப்
12. திரு. கே. பி. எஸ். மணி.

சட்டப் பேரவையின் 215 (1)-வது விதியின் கீழ் திரு. கே. விநாயகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வைத் திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இம் மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

4. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,49,60,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்."

திரு. டி. மார்டின்: தலைவரவர்களே, புலன் ஆய்வுத் துறை மேம்பாடுபற்றி விவாதிக்க—**I move the following cut motion.**